## ‘ஓடு, ஓடு, ஓடு’ என்று...

# பின்னங்கால் பிடரியில் பட - கரூரிலிருந்து ஓடியது யார் விஜய்?

### ‘தமிழ் மின்ட்’ யூடியூப் சேனலுக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் –

## முனைவர் பொன்ராஜ் கேள்வி!

**இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அவர்களின் அறிவியல் ஆலோசகரும், சிறந்த அரசியல் விமர்சகருமான முனைவர் பொன்ராஜ், ‘தமிழ் மின்ட்’ எனும் தனியார் ‘யூ டியூப்’ சேனலுக்கு சிறப்புப் பேட்டியளித்தார். அப்பேட்டியின் ஒரு பகுதி வருமாறு:**

**நெறியாளர்:** முதலமைச்சர் விஜய் அவர்கள்,கரூரில் கூட்ட நெரிசலில் இறந்தவர்களின் குடும்பத்தவர்களைச் சந்தித்திருக்கிறார், அவருடைய பேச்சுகள் குறித்து பல விமர்சனங்கள் வந்திருக்கின்றன. அதாவது, இந்த முறையும் அவருடைய பேச்சு, ஒரு முதலமைச்சர் பேசும் விதமாக இல்லை என்று சொல்லப்படுகிறது. மீண்டும் மீண்டும் தி.மு.க.வின் மீதே குற்றச்சாட்டை வைக்கிறதாகவும் சொல்லப்படுகிறது. அவருடைய பேச்சை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

**பொன்ராஜ்:** ஒரு முதலமைச்சருக்குரிய பேச்சாக அதை நான் பார்க்கவில்லை. தொடர்ந்து ஒரு சினிமா நடிகராக தன்னை நினைத்துக் கொண்டு, எதிர்க்கட்சித் தலைவராக தன்னை நினைத்துக் கொண்டு, மக்கள் மத்தியிலே ஒரு பொய்யைப் பரப்புவதில் குறியாக இருக்கிறார்.

அதுமட்டுமல்லாமல், 41 பேர் மரணமடைந்திருக்கிறார்கள். அந்த இடத்திற்கு இவர் போகிறார். இவ்வளவு நாள்கள் அங்கே போகவில்லை. இவர் இரண்டு இடத்திற்குத்தான் போயிருக்கிறார். இரண்டு இடங்களும் இடைத்தேர்தல் நடைபெறவிருக்கின்ற இடங்கள்தான்.

திருச்சி கிழக்கு தொகுதிக்குப் போயிருக்கிறார். ஏற்கெனவே இவர் தேர்தலில் நின்று, அந்தத் தொகுதி காலியான தொகுதி. இடைத்தேர்தல் வரவிருக்கின்ற தொகுதி.

எம்.ஆர்.விஜயபாஸ்கர் என்ற அ.தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர், த.வெ.க.வில் சேர்ந்திருக்கிறார். எனவே, கரூரில் தேர்தல் நடந்த பிறகு சென்றால், நம்முடைய பெயர் கெட்ட பெயராகிவிடுமோ என்று நினைத்து, இப்போதே சென்று, அந்த மக்களைப் பார்க்கின்ற போர்வையில், தி.மு.க.வின்மீது பொய்யை வாரி இறைத்துவிட்டு வரவேண்டும் என்ற எண்ணத்தைத் தவிர, வேறு எதுவும் அவருடைய பேச்சில் இருப்பதாகத் தெரியவில்லை.

### பகிரங்கமான பொய்!

ஒரு முதலமைச்சர், எங்கே பேசவேண்டுமோ அங்கேயெல்லாம் அமைதியாக இருந்துவிட்டு, மக்களிடம் உண்மையைப் பேச வேண்டிய இடத்தில், பொய்யைப் பேசிவிட்டு, 41பேர் மரணத்திற்கும், இவருக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பது போல, மக்கள் மத்தியில் இவர் பேசுவதைப் பார்த்தால், அனைவருக்கும் இப்படிப்பட்ட பொய்யுரையை ஒரு முதலமைச்சராக இருக்கக்கூடியவர் பேசலாமா? என்கிற கேள்விதான் எழுகிறது.

பெரம்பூரில் தடுத்தார்கள் காவல்துறை, நாங்கள் செல்லவில்லை, கூட்டம் அதிகமாக இருக்கிறது. கரூரிலும் எங்களைத் தடுத்திருந்தால், நாங்கள் சென்றிருக்கமாட்டோம். ஒரு நாடகம் நடத்தி, எங்களை இழுத்துச் சென்றுவிட்டார்கள், கரூருக்கு என்று காவல்துறை மீது ஓர் அப்பட்டமான, பகிரங்கமான பொய்யைக் கட்டவிழ்த்து விடுகிறார் ஜோசப் விஜய் அவர்கள்.

50 மீட்டருக்கு முன்பு, டி.எஸ்.பி. அவர் பயணம் செய்த வாகனத்தை நிறுத்தி, “சார், இதற்கு மேல் நீங்கள் போகக்கூடாது; கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாது. அதனால், என்ன நடக்கும் என்று தெரியாது; ஆகவே, இங்கே இருந்து நீங்கள் பேசுங்கள்” என்ற எச்சரிக்கையையும் மீறி, முடிவெடுத்தது யார்?

ஜோசப் விஜய் எடுத்தாரா?

ஆதவ் அர்ஜுனா எடுத்தாரா?

புஸ்ஸி ஆனந்த் எடுத்தாரா?

இந்தக் கேள்விக்குப் பதில் சொன்னாரா, இன்றைய முதலமைச்சர்.

அதுதானே பிரச்சினைக்குக் காரணமாக இருந்தது.

காவல்துறையினருடைய எச்சரிக்கையையும் மீறி சென்றது நீங்கள். அவர்களுடைய எச்சரிக்கையை,எச்சரிக்கையாக மதிக்காமல், அந்த இடத்திற்குச் சென்றீர்கள்.

### திட்டமிடப்பட்ட டிரைலர்!

ஏனென்றால், நீங்கள் ஏற்கெனவே செட் செய்து அனுப்பிய படப்பிடிப்புக் கருவிகள் அங்கே இருக்கின்றன. அந்தப் பாயிண்ட்டில் நின்று பேசினால்தான், ஜனநாயகன் படத்திற்கு ஷூட்டிங் எடுக்க முடியும் என்ற வீடியோக்கள் எல்லாம் ஏற்கெனவே வெளியாகிவிட்டது. இன்னமும் மக்களை நீங்கள் ஏமாற்ற முடியாது மிஸ்டர் ஜோசப் விஜய் அவர்களே.

எட்டு கேமிரா, ஹிட்டன் கேமிரா, 60 ட்ரோன் கேமிரா போன்றவற்றைக் கொண்டு போய், அந்த இடத்தில், லைட்டிங் போட்டு, இப்படியெல்லாம் வரவேண்டும் என்று ஏற்கெனவே ட்ரைலரில் எழுதி வைத்துவிட்டீர்கள். ஆகவே, இது ஒரு திட்டமிடப்பட்ட ஒரு செயல்.

இந்தத் திட்டமிடப்பட்ட ஒரு செயலை, இப்போது, நீங்கள் ஒரு தேவதூதன் மாதிரி, ஒன்றுமே தெரியாதது மாதிரி, உங்களைக் காவல்துறையினர் தவறாக வழிநடத்திச் சென்றது மாதிரி, நாடகம் நடத்தியது போன்று – சினிமா எடுத்தது நீங்கள். ஆனால், நாடகம் நடத்தினார்கள் என்று காவல்துறையினர்மீது குற்றம் சுமத்துகிறீர்கள்.

காவல்துறையினரை, மேலிடத்திலிருந்து இப்படி நடங்கள், அப்படி நடங்கள் என்று வழிநடத்தினார்கள் என்று குற்றம் சொல்கிறீர்களே, யார் மீது குற்றம் சொல்கிறீர்கள்?

மு.க.ஸ்டாலினையா? செந்தில் பாலாஜியையா? அல்லது உதயநிதி ஸ்டாலினையா?

யாரைக் குற்றம் சொல்கிறீர்கள்?

உங்கள் படத்திற்கு இவர்கள்தான் முதலீடு செய்தார்களா? அல்லது உங்கள் படத்திற்கு கேமிரா அனுப்பினாரா உதயநிதி ஸ்டாலின். அல்லது செந்தில்பாலாஜி முதலீடு செய்தாரா?

### ‘சைக்கோ’தனமான செயல்!

12 மணிக்கு வருவார் விஜய் என்று பத்திரிகைகளுக்குச் சொன்ன புஸ்ஸி ஆனந்த் தானே, உங்கள் கட்சியினுடைய பொதுச்செயலாளர். அவர்தானே, உங்களுடைய சுற்றுப்பய ணத்தை வரையறுத்துக் கொடுப்பவர். உங்கள் கூட வந்தவர் ஆதவ் அர்ஜுனா தானே!

காவல்துறையினருடைய எச்சரிக்கையை மீறிச் சென்றவர்கள் யார்?

நீங்களா, வேறு யாரா?

அந்தப் பேருந்துக்குள் இருந்துகொண்டு லைட்டை ஆன் சென்று, ஆஃப் செய்தது சைக்கோதனமான ஒரு நடவடிக்கை என்று பலராலும் புகாரளிக்கப்பட்ட, பலராலும் குற்றம் சாட்டப்பட்ட அந்த நடவடிக்கையைச் செய்தது யார், நீங்களா? அல்லது செந்தில்பாலாஜியா?




சொல்லுங்கள், பார்க்கலாம்!

இப்படிப்பட்ட ஒரு சூழலில், ஏற்கெனவே இருந்த மக்கள் கூட்டத்தில், ஒரு மூவிங் கூட்டத்தைக் கொண்டு வந்து – ஏற்கெனவே 27 ஆயிரம் பேர் காலையிலிருந்து காத்துக் கொண்டிருக்கிறார்கள். குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. சிறுநீர் கழிப்பதற்குச் செல்ல முடியவில்லை. கூட்ட நெரிசல் – எங்கு பார்த்தாலும் வழிகள் அடைப்பு. பல்வேறு மாவட்டங்களிலிருந்து ஆட்களைத் திரட்டிக் கொண்டு வந்து, கரூரில் பிரச்சாரம் செய்வதற்கு – ஒரு மிகப்பெரிய கூட்டத்தைக் காட்ட வேண்டும் என்று செய்தது யார்?

நீங்கள் தானே!

உங்கள் கூடவே 10 ஆயிரம் பேரை கூட்டிக் கொண்டு வந்தது யார்?

நீங்கள் தானே!

ஏன், அந்தக் கூட்டம் இன்றைக்கு வரவில்லை.

அன்றைக்குத் திருச்சிக்கு நீங்கள் செல்லும் போது, இரு சக்கர வாகனத்தில் 10 ஆயிரம் பேர் வந்தார்களே, இன்றைக்கு ஏன் வரவில்லை?

காசு கொடுத்தீர்கள் அன்றைக்கு வந்தார்கள்; இன்றைக்குக் காசு கொடுக்கவில்லை, அதனால் வரவில்லை.

### வெறிச்சோடிய ‘ரோடு ஷோ’

அதனால்தான், இன்றைய ரோட் ஷோ வெறிச்சோடிக் கிடந்தது. ஆளே இல்லாத டீக்கடையில், எதற்காக டீ ஆற்றுகின்றான் என்பதுபோல், ஆளே இல்லாத தெருவில், கையை ஆட்டிக்கொண்டே போகிறீர்கள். ஒருத்தருமே இல்லை.

**ரோட் ஷோ நடத்தி, பிளாப் ஆனது. அதே கரூரில், ரோட் ஷோ நடத்தி பிளாப் ஆகுது.**

**உங்களைப் பார்ப்பதற்குக் கூட்டமே இல்லை. ஆங்காங்கே சில பேர் நிற்கிறார்கள், ஒரு நடிகரைப் பார்க்கவேண்டும் என்பதற்காக.**

**12 மணிக்கு நீங்கள் பேசப் போகிறீர்கள், 11 மணிக்கு தொலைக்காட்சி நேரலையில், ஒருத்தருமே வரவில்லையே, மாநாட்டுப் பந்தலுக்கு.**

**அதற்குப் பிறகு, விஜயபாஸ்கர், அ.தி.மு.க.வினரை அழைத்து வந்திருக்கிறார். த.வெ.க.வினரை அழைத்து வந்து, கூட்டத்தைக் காட்டினார்கள்.**

**இதிலிருந்து என்ன தெரிகிறது?**

**எல்லாம் இழுத்து வரப்பட்ட கூட்டம்; கூட்டி வரப்பட்ட கூட்டம்.**

கூட்டி வரப்பட்டு, செயற்கையாக உருவாக்கப்பட்ட கூட்டத்தில், இருக்கின்ற கூட்டத்தில், மூவிங் கூட்டத்தை கூட்டி வந்து, காவல்துறையினருடைய எச்சரிக்கையை மீறி, இவருடைய பஸ் அந்தக் கூட்டத்திற்குள் வரும் வரை, யாராவது ஒருவர் இறந்தார்களா என்றால், இல்லை.

அவருடைய பஸ் உள்ளே வந்தவுடன், எத்தனை பேர் இறந்தார்கள். ஒவ்வொரு செயலுக்கும், சமமான எதிர்வினை உண்டு.

பேருந்து உள்ளே வந்தவுடன், நெரிசலால் கூட்டம் நாலாபக்கமும் சிதறுகிறது. இவருடைய கண் முன்னால் இறந்து விழுகிறார்கள். ஆம்புலன்சில் தூக்கிச் செல்கிறார்கள். குழந்தையைக் காணவில்லை என்று பெயர் சொல்லி, ஆதவ் அர்ஜுனா அறிவிப்புச் செய்யச் சொன்னது யார்? தண்ணீர் பாட்டிலைத் தூக்கிப் போட்டது யார்? நீங்கள்தானே!

இதுபோன்ற நிகழ்வுகள் நடக்கின்றபோது, ஒரு தலைவன் எப்படி இருக்க வேண்டும்?

சினிமாவில், யாருக்காவது பிரச்சினை என்றால், பைக்கில் சென்று காப்பாற்றுகிறீர்கள், பிளேட்டில் போய்க் காப்பாற்றுகிறீர்கள், காரில் போய் காப்பாற்றுகிறீர்கள், டிராக்டரில் போய் காப்பாற்றுகிறீர்களே!

கண் முன்னே 30 பேர் இறந்து விழுகிறார்கள்; ஒரு தலைவன் எப்படி இருந்திருக்க வேண்டும்?

என்னை கைது செய்தாலும் பரவாயில்லை, நான் நேரிடையாகக் களத்தில் நிற்பேன் என்று சொல்லி, மருத்துவமனைக்குச் சென்றிருக்கவேண்டும் அல்லவா! ஆனால், நீங்கள் என்ன செய்தீர்கள், மிஸ்டர் விஜய்.

அதைவிட்டுவிட்டு, இப்போது என்ன சொல்கிறீர்கள், ‘ஓடு, ஓடு, ஓடு’ என்று சொல்கிறீர்களே, நீங்கள் ஓடியதைச் சொல்லிக் காண்பிக்கின்றீர்களா?

கரூரில் இருந்து திருச்சிக்கு ஓடியதைச் சொல்லிக் காண்பிக்கின்றீர்களா?

திருச்சியில், செய்தியாளர்கள், 30 பேர் இறந்துவிட்டார்கள் என்று சொன்னபோது, தலையைக்கூடத் திருப்பாமல், பின்னங்கால் பிடரியில் பட பையைத் தூக்கிக்கொண்டு ஓடினீர்களே, சென்னைக்கு – அதைச் சொல்லிக் காண்பிக்கின்றீர்களா? ஓடு, ஓடு, ஓடு என்று.

யாரை ஏமாற்றுகின்றீர்கள்?

எந்த மக்களை ஏமாற்றுகின்றீர்கள்?

நீங்கள் முதலமைச்சராகிவிட்டால், நீங்கள் சொல்வது எல்லாம் வேத வாக்கா?

நீங்கள் முதலமைச்சராகிவிட்டதால், நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையாகிவிடுமா?

என்ன பேசுகிறீர்கள் நீங்கள்?

ஒரு நடந்த சம்பவத்தை, மூன்று நாள்கள் ஒளிந்துகொண்டு, ஒரு மாதம் புஸ்ஸி ஆனந்த் எங்கே போனார் என்றே தெரியவில்லை. ஓடி ஒளிந்துகொண்டார்.

பட்டிமன்ற அமைச்சர் ராஜ்மோகன் அன்றைக்கு எங்கே போனார் என்று தெரியவில்லை.

ஆதவ் அர்ஜுனா மட்டும், குருமூர்த்தியை, வீடியோவை வெளியிடச் சொல்லிவிட்டு, நேராக டில்லிக்குச் சென்று, சி.பி.அய்.யிடம் உங்களை மாட்டிவிட்டு வந்துவிட்டார்.

இன்றைக்கு நீங்கள் எல்லாம் உத்தமர்கள் போல் பேசுகின்றீர்கள்.,கரூர் சம்பவத்திற்கும், உங்களுக்கும் தொடர்பே இல்லாது போன்று.

எப்படி இப்படிப்பட்ட பொய்யை உங்களால் பேச முடிகிறது?

### மக்களைக் காப்பாற்றியவர் மு.க.ஸ்டாலின்!

**ஏற்கெனவே அந்த இடத்திலிருந்து நீங்கள் ஓடினீர்கள். அந்த இடத்திற்குச் சென்று, அங்கே நின்று அன்றைக்கு மக்களைப் பாதுகாத்தவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். 120 பேர், அடிபட்டு, மிதிபட்டு மருத்துவமனைக்குக் குற்றுயிரும், குலையுருமாக வந்தவர்கள் 120 பேர். அதில் ஒருவர்கூட சாகவில்லை.**

**அவர்களைக் காப்பாற்றியவர் திரு. மு.க.ஸ்டாலின்.**

**அந்த உயிர்களைக் காப்பாற்ற அத்தனை முயற்சிகளையும் எடுத்தவர் சுப்பிரமணியம், செந்தில்பாலாஜி, அன்பில் மகேஸ் – நான்கு மாவட்டத்தில் உள்ள மருத்துவர்களை வரவழைத்து, நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்து, ஒரு பண்பாடு மிக்க முதலமைச்சராக செயல்பட்ட முதலமைச்சர் ஸ்டாலினை, எந்த அளவிற்குத் தரக் குறைவாக, இழிந்த நிலையில், 5 நிமிடம் பேசியதற்கே, கொளத்தூரில் கொத்துப் பரோட்டா போட்டுவிட்டார்கள் என்று பேசுகின்ற அளவிற்குத் தரந்தாழ்ந்த வார்த்தைகளைப் பயன்படுத்தி பேசுவதுதான் ஒரு முதலமைச்சரின் அடையாள மாண்பா? முதலமைச்சருடைய பண்பு நிலையா?**

### புழல் சிறையில் அடைக்கப்பட்டிருப்பார் விஜய்.

இதே ஜெயலலிதாவாக இருந்திருந்தால், நீங்கள் புழல் சிறையில் அடைக்கப்பட்டு இருப்பீர்கள். உங்களுடைய ஒட்டுமொத்த அணியும் புழலில் இருந்திருப்பார்கள்.

மு.க.ஸ்டாலின் செய்த ஒரே தவறு அந்தத் தவறுதான்!

### பி.ஜே.பி.யின் ‘Proxcy’ அரசு த.வெ.க.!

பெருந்தன்மையோடு நடந்துகொண்டார் அல்லவா, அதுதான் அவர் செய்த தவறு.

இன்றைக்கு அப்படியே பிளேட்டை மாற்றிப் பேசுகிறீர்கள். ஏற்கெனவே அது சி.பி.அய். விசாரணையில் சொல்லிவிட்டார்களா, உங்களை நாங்கள் விடுவித்து விடுகிறோம் என்று. ஏனென்றால், நீங்கள் பி.ஜே.பி.யின் Proxcy அரசுதானே – அதனால், இவ்வளவு தைரியமாகப் பேசுகிறீர்களா? கரூர் நெரிசலில் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசு பணி வழங்குவதற்கு அவர்கள் என்ன சுதந்திரப் போராட்டத் தியாகிகளா? மொழிப் போர்த் தியாகிகளா? மேகதாது அணை கட்டக் கூடாது என்று சொல்லி, உயிர் நீத்த தியாகிகளா? இட ஒதுக்கீடுக்காகப்போராடி, உயிர்நீத்த தியாகிகளா? கார்கில் போரில், ராணுவத்தில் உயிர் நீத்த தியாகிகளா? நினைவுச் சின்னம் எழுப்பவேண்டும் என்று சொல்கிறீர்களே, தாராளமாக எழுப்புங்கள். தஞ்சாவூர் கல்வெட்டு போன்று, அங்கே ஒரு கல்வெட்டை வைத்து, அதில் நீங்கள் புறமுதுகிட்டு ஓடிய படத்தை, சிலையாக வடித்து வையுங்கள். 41 பேருடைய பிணத்தின்மீது ஏறி தாவி ஓடுவது போன்ற சிலையை வையுங்கள்.

அந்த சிலையை வைத்து, அறிவார்ந்த தமிழ்ச் சமுதாயம், கல்வியில் சிறந்த தமிழ் நாடு, 41 பேர் சினிமா நடிகனைப் பார்க்க வந்து, உயிரை மாய்த்த நினைவுச் சின்னம் என்று வையுங்கள்!

வருங்காலச் சந்ததியினர் அதைப் பார்த்துத் தெரிந்து கொள்ளட்டும்; கற்றுக் கொள்ளட்டும்!

இவ்வாறு பொன்ராஜ் அவர்கள் பேட்டியின் போது குறிப்பிட்டார்.



தாம்பரம் மாநகராட்சி மண்டலம்2 வார்டு எண்:17 க்கு உட்பட்ட லத்தீப் காலனி, தர்கா காலனி,பகுதியில் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அமைக்கப்பட்ட சிறு மின்விசை நீர்த்தேக்கத் தொட்டியை மண்டலத் தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். உடன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ.ஜானகிராமன் வட்டக் கழக செயலாளர் டி.எச். பிரான்சிஸ் பால் குடியிருப்போர் நலச்சங்க நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

### த.வெ.க. ஆட்சியில் பெருகிவரும் பெண்களுக்கெதிரான குற்றச் சம்பவங்கள்!

# திருவள்ளூரில் பள்ளி மாணவி கடத்தப்பட்டு பாலியல் சீண்டல்!

## பொதுமக்கள் கடும் அச்சம்! வாலிபர் கைது!

*திருவள்ளூர், ஜூலை 13;*

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அடுத்த பொதட்டூர்பேட்டையில் பள்ளிக்குச் சென்ற 16 வயது மாணவியை வழிமறித்து கடத்திச் சென்று பாலியல் சீண்டலில் ஈடுபட்ட சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியையும், பெற்றோர்கள் மத்தியில் கடும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த வழக்கில் சாமியப்பன் (19) என்பவரை போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்துள்ளனர். மேலும், இந்தக் கடத்தல் மற்றும் பாலியல் சீண்டல் சம்பவத்திற்கு உடந்தையாக செயல்பட்டதாக கூறப்படும் அவரது தாய் உட்பட நான்கு பேரை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

பொதட்டூர்பேட்டை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பிளஸ்2 பயிலும் 16 வயது மாணவி, நேற்று முன்தினம் காலை வழக்கம் போல் வீட்டிலிருந்து பள்ளிக்குச் சென்றார். பேருந்து நிலையம் அருகே வாரச் சந்தை திடலை கடந்து சென்றபோது, வாணிவிலாசபுரம் காலனியைச் சேர்ந்த வெங்கடேஷின் மகன் சாமியப்பன் (19) என்பவர், தனது உறவினர்கள் மற்றும் நண்பர்களின் உதவியுடன் மாணவியை வழிமறித்து பைக்கில் வலுக்கட்டாயமாக கடத்திச் சென்றதாக கூறப்படுகிறது.

கடத்திச் செல்லப்பட்ட மாணவிக்கு பாலியல் சீண்டல் செய்யப்பட்டதாக மாணவியின் தந்தை பொதட்டூர்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். நிலையில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

இதையடுத்து சாமியப்பன் மீது போக்சோ சட்டம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்டார். பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவர் சிறையில் அடைக்கப்பட்டார். இந்தச் சம்பவத்தில் சாமியப்பனுக்கு உடந்தையாக செயல்பட்டதாக அவரது தாய் நாகம்மாள் (44), உறவினர்கள் நாகராஜன் (43), சிவக்குமார் (40), நண்பர் விஷ்ணு (19) ஆகியோர் மீதும் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. தலைமறைவாக உள்ள நான்கு பேரையும் கைது செய்ய போலீசார் தனிப்படை அமைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். இந்தச் சம்பவம் திருவள்ளூர் மாவட்ட மக்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பள்ளிக்குச் செல்லும் மாணவிகளுக்குக் கூட பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாக பெற்றோர்கள் வேதனை தெரிவிக்கின்றனர். குழந்தைகளை நம்பிக்கையுடன் பள்ளிக்கு அனுப்ப முடியாத சூழல் உருவாகி வருவதாகவும் சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், த.வெ.க. ஆட்சியில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றன. பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதாக தேர்தல் வாக்குறுதிகள் அளிக்கப்பட்ட போதிலும், நடைமுறையில் பெண்கள், மாணவிகள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பின்றி வாழும் சூழல் உருவாகியுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

மேலும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள், சிறுமிகள் மீதான வன்முறைகள், கடத்தல் சம்பவங்கள் அதிகரித்து வருவது சட்டம்ஒழுங்கு சீர்குலை வதற்கான அறிகுறி எனவும் குற்றவாளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு தவறினால், பொதுமக்களின் நம்பிக்கை மேலும் பாதிக்கப்படும் என்றும் அவர்கள் எச்சரிக்கின்றனர்.